


**25.10. 2024**

**தலைப்புச் செய்திகள்**

**1.** இந்தியா - ஜெர்மனி நாடுகளுக்கிடையேயான நட்புறவு அனைத்து நிலைகளிலும் வலுவடைந்து வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

**2.** ராக்கெட் தயாரிப்பில் 100 சதவிகித உதிரி பாகங்களை நம் நாட்டிலேயே தயாரிக்கும் நிலை உருவாகும் என்று இஸ்ரோ தலைவர் டாக்டர் எஸ்.சோம்நாத் நம்பிக்கை கூறியுள்ளார்.

**3.** தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் மக்கள் நல திட்டங்கள் நேரில் கள ஆய்வு செய்யப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

**4.** தமிழ்நாட்டில் கடன் சுமை பெருமளவு அதிகரித்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி குற்றம் சாட்டியுள்ளார்.

**5.** Basel ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் யூக்கி பாம்ப்ரி, அல்பனோ ஒலிவெட்டி இணை இன்று களமிறங்குகிறது.

**இனி விரிவான செய்திகள்**

***********

**பிரதமர்**

இந்தியா - ஜெர்மனி நாடுகளுக்கிடையே நட்புறவு அனைத்து நிலைகளிலும் வலுவடைந்து வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஜெர்மன் வர்த்தகம் தொடர்பான 18ஆவது ஆசிய பசிபிக் மாநாட்டில் இன்று உரையாற்றிய பிரதமர், அடுத்த 25ஆண்டுகளில் இந்நாடுகளுக்கிடையே அரசியல் உறவு புதிய உயரங்களை எட்டும் என்றார்.

பண்முக தன்மையின் மாபெரும் மையமாக இந்தியா உருவெடுத்து வருவதாக கூறிய பிரதமர், சவால்களை துணிச்சலுடன் எதிர்கொண்டு வருவதாகவும் எடுத்துரைத்தார்.

சர்வதேச நாடுகளின் எதிர்காலத்திற்கு இந்தோ பசிபிக் பிராந்திய உறவுகள் மிக முக்கியமானது என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

ஜனநாயகம், தேவை, தரவு, மக்கள்தொகை, என்ற நான்கு அம்சங்கள் இந்தியாவின் தூண்களாக திகழ்கிறது என்று கூறிய பிரதமர், திறன்மேம்பாடு, தொழில்நுட்பம், புதுமையான படைப்பாற்றல், கட்டமைப்பு ஆகியவை தேச வளர்ச்சியின் முக்கிய கருவிகளாக விளங்குகிறது என்றார்.

ஆக்கப்பூர்வமான ஊக்கமும், செயற்கை நுண்ணறிவும் இரு பெரும் சக்திகளாக இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து முன்னேற்றப்பாதையில் செல்வதாக பிரதமர் பெருமிதம் வெளியிட்டார்.

முன்னதாக ஜெர்மன் தலைவர் ஒலாப் ஸ்கால்ஸ் பிரதமர் திரு.நரேந்திரமோடியை இன்று அவரது இல்லத்தில் சந்தித்து பொருளாதாரம், முதலீடுகள் உற்பத்தி தொழில்நுட்பம் படைப்பாற்றல் திறன் பாதுகாப்பு ராணுவம் பிரிவுகளில் எதிர்கால ஒத்துழைப்பிற்கான வாய்ப்புகள் குறித்து விவாதித்தனர்.

இரு தலைவர்களும் புதுதில்லியில் 7ஆவது அரசுகளுக்கிடையிலான விரிவான பேச்சுவார்த்தையில் இன்று பங்கேற்கின்றனர்.

புதிய தொழில்நுட்பங்களில் இணைந்து செயலாற்றுவது குறித்து இரு தலைவர்களும் முக்கியமாக விவாதிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

***********

**மன்கீபாத்**

இதனிடையே அகில இந்திய வானொலியில் மன் கீ பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் 115ஆவது முறையாக நாளை மறுநாள் உரையாற்ற உள்ள நிலையில் இதற்கான கருத்துக்களை மக்கள் இன்றுமாலைக்குள் mygov.in, நமோ செயலி மற்றும் 1800 11 7800 என்ற எண்ணில் தெரிவிக்கலாம்.

***********

**குடியரசு தலைவர்**

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு சட்டிஸ்கட் மாநிலம் ராய்பூர் எயிம்ஸ் மற்றும் தேசிய தொழில்நுட்ப கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் இன்று மாணாக்கருக்கு பட்டங்களை வழங்கி கவுரவிக்கிறார்.

அம்மாநில அரசின் மகளிர் திட்டத்தின் கீழ் 70 லட்சம் பெண்களுக்கு 9ஆவது தவணை தொகையை அவர் விடுவிக்கிறார்.

நாளை பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா அறிவியல் மற்றும் ஆயுர்வேத பல்கலைகழகத்தின் பட்டமளிப்பு நிகழ்ச்சியிலும் குடியரசு தலைவர் பங்கேற்கிறார்.

***********

**எல்.முருகன்**

நாட்டின் முதல் பொது தேர்தல் நடைபெற்ற 73 ஆவது ஆண்டு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

ஜனநாயகத்தின் வலிமை மற்றும் எதிர்காலத்தை வடிவமைப்பதில் ஒவ்வொரு குடிமகனின் பங்கை இத்தினம் எடுத்துரைப்பதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக திகழும் இந்தியாவிற்கு தமது வணக்கத்தை உரித்தாக்கிகொள்வதாக அவர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

***********

**தேர்தல்**

ஜார்கண்ட் மாநிலத்தின் 43 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 13ஆம் தேதி நடைபெறும் முதல் கட்ட வாக்குப்பதிவிற்கான வேட்பு மனு தாக்கல் இன்று நிறைவடைகிறது.

இதுவரை 748 பேர் மனுக்கள் தாக்கல் செய்துள்ள நிலையில் வரும் 28ஆம் தேதி மனுக்கள் பரிசீலிக்கப்படுகின்றன.

மனுக்களை விலக்கி கொள்வதற்கான கால அவகாசம் வரும் 30ஆம் தேதி முடிவடைகிறது.

இந்நிலையில் 27 கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்களை பறக்கும் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இத்துடன் மகராஷ்டிரா Nanded மக்களவை தொகுதி மற்றும் உத்திரகாண்ட் மாநிலம் கேதார்நாத் சட்டப்பேரவை தொகுதி நீங்கலாக ஏனைய 47 சட்டப்பேரவை மற்றும் வயநாடு மக்களவை தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கலும் இன்று நிறைவடைகிறது.

இந்த தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 13ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

Nanded மக்களவை தொகுதிக்கும் கேதார்நாத் சட்டப்பேரவை தொகுதிக்கும் வேட்புமனு தாக்கல் வரும் 20ஆம் தேதி முடிவடைகிறது.

மனுக்கள் 30 ஆம் தேதி பரிசீலக்கப்படுகின்றன.

அவற்றை விலக்கி கொள்ள அடுத்த மாதம் 4ஆம் தேதி கடைசி நாளாகும்.

வாக்குப்பதிவு அடுத்த மாதம் 20ஆம் தேதி நடைபெறுகிறது.

இத்தேர்தல்களில் பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் 23ஆம் தேதி எண்ணப்படுகின்றன.

***********

**சோம்நாத்**

ராக்கெட் உற்பத்திக்கான 95 சதவிகித உதிரி பாகங்கள் நம் நாட்டிலேயே தயாரிக்கப்படுவதாக இஸ்ரோ தலைவர் டாக்டர் எஸ்.சோம்நாத் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சாணக்கியா பாதுகாப்பு பேச்சுவார்த்தை 2024 நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர் 5 சதவிகிதம் மின்னணு பாகங்களே வெளிநாடுகளிலிருந்து கொள்முதல் செய்யப்படுவதாக குறிப்பிட்டார்.

விரைவில் 100 சதவிகித உதிரி பாகங்களையும் நம் நாட்டிலேயே தயாரிக்கும் நிலை ஏற்படும் என்றார்.

விண்வெளி துறையில் நவீன தொழில்நுட்பங்கள், கட்டமைப்புகளில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக கூறிய அவர் செயற்கைகோள்களுக்கு உகந்ததாக இதனை மாற்றுவதற்கான நிலைப்பாடுகளை முகமைகள் கண்டறிய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

விண்வெளியில் ராக்கெட்டுகள் ஏவப்படுவதால் ஏராளமான மின்னணு பாகங்கள் அங்கு கண்டறியப்பட்டிருப்பது குறித்து கவலை வெளியிட்டுள்ள அவர் இதுதொடர்பான விழிப்புணர்வின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

***********

**அமித்யாதவ்**

நாட்டில் நிதி ஸ்திரதன்மையை உறுதி செய்து, விளிம்பு நிலை மக்களுக்கு வள ஆதாரங்கள் கிடைக்கும் வகையிலான கொள்கைகளின் அவசியத்தை மத்திய சமூக நீதி அதிகாரம் அளித்தல் துறை செயலர் திரு.அமித் யாதவ் வலியுறுத்தினார்.

புதுதில்லியில் விளிம்பு நிலை மக்களுக்கான பொருளாதார உள்ளடக்கம் குறித்த கருத்தரங்கில் இன்று உரையாற்றிய அவர், ஏழை எளிய மக்களுக்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய ஊரக மேம்பாட்டு துறை செயலர் திரு.சைலேஷ்குமார் சிங், பொருளாதார மேம்பாட்டில் ஏழை எளிய மக்களின் உள்ளடக்கத்தினால் 2047 ஆம் ஆண்டு வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற மத்திய அரசின் கனவு நனவாகும் என்றார்.

இந்நிகழ்ச்சியில் ஏழை எளிய மக்களுக்கு திறன்மேம்பாடுகள் கிடைக்கப்பெற வேண்டியதன் அவசியம் குறித்து திறன்மேம்பாட்டுத்துறை செயலர் திரு. அத்துல்குமார் திவாரி எடுத்துரைத்தார்.

***********

**முதலமைச்சர்**

தமிழகத்தில் செயல்படுத்தப்படும் மக்கள் நல திட்டங்களை தாம் நேரில் கள ஆய்வு செய்ய இருப்பதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதன்படி வரும் 5, 6 ஆகிய தேதிகளில் கோவை மாவட்டத்தில் ஆய்வு மேற்கொள்ளப்படும் என்றார்.

***********

**epjpAjtp**

jpUney;Ntyp khtl;lj;jpy; rhiy tpgj;jpy; caphpoe;;j tPutey;Y}H fhty;epiya cjtp Ma;thsH FLk;gj;jpw;F Kjyikr;rhpd; nghJ epthuz epjpapypUe;J 10 yl;r &gha; epjpAjtp toq;f Kjyikr;rH jpU. K.f. ];lhypd; cj;jptpl;Ls;shH.

caphpoe;jthpd; FLk;gj;jpdUf;F Mo;e;j ,uq;fiyAk; mtH njhptpj;Js;shH.

***********

**கீதாஜீவன்**

தமிழ்நாட்டில் பெண்களின் மனம், உடல் நலம் சார்ந்த திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் புதிய மகளிர் பூங்காவை இன்று திறந்துவைத்து பேசிய அவர் இத்திட்டங்களை மகளிர் அதிக அளவில் பயன்படுத்த முன்வர வேண்டும் என அறிவுறுத்தினார்.

**வாய்ஸ்**

***********

**உதயநிதி ஸ்டாலின்**

முதலமைச்சரின் புத்தாய்வு திட்டத்தின் கீழ் பயிற்சி நிறைவு செய்தவர்கள் இளையோருக்கு வழிகாட்டியாக திகழ வேண்டும் துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னை தலைமை செயலகத்தில்இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றோருக்கு சான்றிதழ்களை வழங்கி பேசிய அவர், பயிற்சி நிறைவு செய்தவர்களுக்கு வேலை வாய்ப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

***********

**எடப்பாடி**

திமுக ஆட்சியில் தமிழகத்தின் கடன் சுமை பெருமளவு அதிகரித்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சேலத்தில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர் அரசு பல்வேறு வரிகளை உயர்த்திய போதிலும், கூடுதலான கடன் சுமை ஏற்பட்டது குறித்து கேள்வி எழுப்பியுள்ளார்.

***********

**சிறுத்தை நடமாட்டம்**

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை பெரக்கரை நாடு ஊராட்சிக்குட்பட்ட வாழக்காடு கிராமத்தில் சிறுத்தை நடமாட்டம் இருப்பதாக வந்த தகவலை அடுத்து வனத்துறையினர் அங்கு தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

***********

**கோமுகி அணை**

கள்ளக்குறிச்சி மாவட்டம் கோமுகி அணையிலிருந்து ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் இன்று பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவைத்தார்.

40 கிராமங்களை சேர்ந்த 10 ஆயிரத்து 860 ஏக்கர் நிலங்கள் இதன் மூலம் பாசன வசதி பெறும்.

கரையோர மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க அறிவுறுத்தியுள்ள ஆட்சித்தலைவர் நீரை சிக்கனமாக பயன்படுத்த கேட்டுக்கொண்டார்.

**வாய்ஸ்**

***********

**ஆட்டு சந்தை**

தீபாவளி பண்டிகையை ஒட்டி மதுரை திருமங்கலம் ஆட்டுச்சந்தையில் ஆறு கோடி ரூபாய்க்கு மேல் விற்பனை நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***********

**ரயில் பழுது**

அஸ்ஸாம் திருப்ருஹரிலிருந்து கன்னியாகுமரி சென்றுகொண்டிருந்த விவேக் விரைவு ரயில் திருவலம் முகுந்த ராயபுரம் இடையே எஞ்சின் கொக்கி பழுதானதால் அதன் போக்குவரத்து தாமதமானது.

ரயில்வே ஊழியர்கள் இந்த பழுதை சரிசெய்த நிலையில், 3 மணி நேரம் தாமதமாக இந்த ரயில் புறப்பட்டு சென்றது.

***********

**வானிலை**

அரபிக்கடல் பகுதியின் மேல் கீழடுக்கு சுழற்சி நிலவுவதால் தேனி திண்டுக்கல் தென்காசி திருநெல்வேலி கன்னியாகுமரி திருப்பூர் கரூர் திருச்சி நாமக்கல் புதுக்கோட்டை தஞ்சை திருவாரூர் நாகை மயிலாடுதுறை மாவட்டங்களில் இன்று கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடமேற்கு வங்ககடல், மேற்குவங்கம், ஒடிசா கடற்பகுதிகளில் இன்று 115 கிலோ மீட்டர் வேகத்தில் சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிக்கு இன்று செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

***********

**கோவில்**

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் கந்த சஸ்டி திருவிழா வரும் 2ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சூரஸம்ஹாரம் வரும் 7ஆம் தேதி நடைபெறுகிறது.

***********

**டென்னிஸ்**

ஸ்விட்சர்லாந்தில் நடைபெறும் Swiss Indoors Basel ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் யூக்கி பாம்ப்ரி, ∴பிரான்சின் அல்பனோ ஒலிவெட்டி இணை – பிரிட்டனின் **Jamie Murray,** ஆஸ்திரேலியாவின் **John Peers** இணையை இன்று பிற்பகல் எதிர்கொள்கிறது.

***********

**கிரிக்கெட்**

புனேயில் இந்தியாவிற்கு எதிரான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான இன்று நியூசிலாந்து தனது இரண்டாவது இன்னிங்சில் சற்றுமுன் 1 விக்கெட் இழப்பிற்கு 71 ரன் எடுத்திருந்தது.

முன்னதாக இந்தியா தனது முதல் இன்னிங்சில் 156 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

நியூசிலாந்து முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 259.

***********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

***********